## 12

## எலியா

# தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவம்

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 16:29-22:40*

*இப்போது சில காலமாக நான் பின்வரும் குறிப்புரையைக் கேள்விப் பட்டிருக்கின்றேன். "தேவனுக்கென்று தம்மை முற்றிலுமாக அர்ப்பணித் துள்ள ஒரு தனிநபரின் மூலமாக அவர் [தேவன்] என்ன செய்யக்கூடும் என்பதை, உலகம் இன்னமும் கண்டிருக்கவில்லை."*

*நல்லது, அது கண்டிருக்கிறது மற்றும் கண்டிருக்கவில்லை. ஒரு கருத்தில், இந்தக் கூற்று உண்மையாக உள்ளது; ஏனெனில் எந்த மனிதரும், அவர் எவ்வளவுதான் பரிசுத்தமானவராக இருந்தாலும், சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாவல்லமைமையை ஒருக்காலும் முற்றிலுமாகப் பயன் படுத்தித் தீர்த்துவிட இயலாது. இருப்பினும், இன்னொரு கருத்தில், இந்த உறுதிப்பாடு உண்மையே அல்ல என்று நாம் கூற முடியும். விலை, உறுதிப்பாடு அல்லது விமர்சனம் ஆகியவை எவ்வாறு இருப்பினும், தேவனுடன் விசுவாசநிறைவோடு நடப்பதைத் தேர்ந்துகொள்கின்ற தனிநபர் மூலமாகத் தேவன் என்ன செய்யக்கூடும் என்பதை நமக்குக் காண்பிப்பதற்கு அவ்வப்போது விசுவாசம் நிறைந்த ஆத்துமா ஒன்று உடன் வரும். சமமான தரைக்கு எதிராக, பனிமூடிய குன்றுகளைப் போன்று, தேவனுடைய வசனத்தில் நிலை நின்றவர்களுக்கு, ஏனோக்கு (ஆதியாகமம் 5:22), மோசே (உபாகமம் 34:10), எலியா (2 இராஜாக்கள் 2:12), மற்றும் பவுல் (நடபடிகள் 26:16-18) ஆகியோர் ஒரு சில உதாரணங்களாக இருக்கின்றனர்.*

*இஸ்ரவேலின் நடத்துனர்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ளத் தொடருகையில், ஆவிக்குரிய மின்உற்பத்திக்கருவிகளான இவர்களில் ஒருவரான எலியாவைப் பற்றிக் கலந்துரையாட வேண்டியது அவசியமா கிறது. அவர், யாரோ ஒருவர் கூறியுள்ளபடி, வேதவசனங்களின் பக்கங்களில் "ஒரு புயல் காற்றில்," வருகின்றார் மற்றும் ஒரு "சுழற்காற்றில்" செல்கின்றார். அவர் திடீரென்று ஏற்பட்ட இடிமுழக்கத்தில் ஆகாபின் அரண்மனையில் ஆரவாரிக்கின்றார், அங்கு விக்கிரகாராதனையைக் கண்டிக்கின்றார் மற்றும் ஒரு பஞ்சத்தை முன்னுரைக்கின்றார்.*

*அவர் வேதவசனங்களில், "நம்மைபோலப் பாடுள்ள மனுஷன்" என்று குறிப்பிடப்படுகின்றார் (யாக்கோபு 5:17); இருப்பினும், அவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளிலேயே மாபெரும் மனிதர்களில் ஒருவராக*

இருந்தார், தவறாத விசுவாசத்தின், களைப்படையாத கீழ்ப்படிதலின், மற்றும் தமக்குத் தேவன் அளித்த கடமையில் அஞ்சாத உறுதிகொண்டிருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை.

தேவன் அவரை அனுப்பியிருந்த, எதிர்தாக்குதல் நிறைந்த சூழ்நிலையினிமித்தம், அவர் அழகின் மற்றும் அன்பின் வல்லமையின்மீதோ அல்லது நேர்மறையான சிந்தனையின் மதிப்பீட்டின்மீதோ ஒரு நீண்ட உரையாற்றவில்லை; மாறாக, அவர் சத்தியத்தின் அதிகாரத்துவத்தை அற்புதவிதமாகச் செயல்விளக்கப்படுத்தினார். அவர் ஒரு புதிய வெளிப்படுத்துதலைக் கொண்டுவரவில்லை, ஆனால் அவர் ஏற்கனவே தரப்பட்டிருந்த ஒரு வெளிப்படுத்துதலைத் தற்காத்தார். அவர் ஒரு போதகரல்ல, ஆனால் ஒரு சீரமைப்பாளராயிருந்தார் - அவர் ஒரு உள்ளூர் சுவிசேஷ ஊழியக்காரரல்ல, ஆனால் இடம்விட்டு இடம் செல்லும் பிரசங்கியாராயிருந்தார்.

அவரது வாழ்வும், தேவனுடன் அவரது நடையும், தேவன் அவருக்கு மரணத்தைத் தாண்டிச் செல்லும் பாக்கியத்தையும் அவரைத் தேவன் தமது இல்லத்தில் தம்முடன் இருப்பதற்கு, ஒரு அக்கினியின் ஜீவாலையில் எடுத்துக்கொள்ளும் சிலாக்கியத்தையும் அனுமதிக்கும் அளவுக்கு மனதை ஈர்ப்பதாக இருந்தது. உண்மையிலேயே, அவர் ஒரு இடிமுழக்கம்போல் வந்து, இஸ்ரவேலின் நடுவே ஒரு அக்கினியைப்போல் கடந்து சென்று, சுழற்காற்றில் இல்லத்திற்குச் சுழன்று சென்றார்.

அவர் இஸ்ரவேலின் வரலாற்றில் இடர்பாடான ஒரு சந்தர்ப்பத்தில் தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவமாக இருந்தார். துன்மார்க்கரான ஆகாபும் பொல்லாதவளான யேசபேலும், ஏறக்குறைய இஸ்ரவேல் முழுவதையும் பாகாலை ஆராதிக்கக் கொண்டு வந்திருந்தனர். நாடானது தனது ஆவிக்குரிய மரணப் படுக்கையில் இருந்தது. இஸ்ரவேல் நாடு, விக்கிரகாராதனையின் வாதநோயினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருந்தது மட்டுமின்றி, மரணத்திற்கேதுவான அந்த வியாதி யூதாவிலும் வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. தேவபக்தியுள்ள மனிதர்கள் சிலரே இருந்தனர். யெகோவாவை உண்மையுடன் ஆராதிப்பவர் ஒருவரைக் கண்டறிய முயற்சி செய்தல் என்பது, சேற்று வயலில் ஒரு சிறு வைரத்தைக் கண்டறிய முயற்சி செய்வது போலிருந்தது. இஸ்ரவேலின் எதிர்காலம், யாரேனும் ஒருவர் வந்து வேறுபாட்டை ஏற்படுத்துதலைச் சார்ந்திருந்தது - அவர், துன்மார்க்கத்திலிருந்து எழும்பும் அலைகளுக்கு எதிராக பலமான ஆவிக்குரிய மதிலாக இருக்கக்கூடிய அசாதாரணமான நபராக இருக்க வேண்டியது அவசியமாயிற்று. இஸ்ரவேல் நாடு, வேறெவரும் செய்ய முடியாதபடி சத்தியத்தில் உறுதியாய் நிலை நிற்கக்கூடிய ஒரு மனிதரைக் கொண்டிருத்தல் என்பது மிகமிகத் தேவையாய் இருந்தது. அந்த மனிதராக இருக்கும்படி தேவன் எலியாவைத் தேர்ந்துகொண்டார், மற்றும் தேவனுடைய தீர்மானத்தை எலியா, தாழ்மையான கீழ்ப்படிதலுடன் ஏற்றுக்கொண்டார்.

தேவன் தமது மக்களைத் தம்மிடம் திரும்பக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்திய அவரது செயல் முறைகள் எப்போதுமே மனிதர்களை

- சாதாரண மனிதர்களை அல்ல, ஆனால் பரிசுத்தமான மனிதர்களை பயன்படுத்துவதாக இருந்துள்ளன. அப்படிப்பட்ட மனிதர்கள் கண்டிப் பான ஒழுங்குமுறையில் நடந்தனர் மற்றும் உலகம் புகழ்ந்துரைக்கும் மதிப்பீடுகளை அவர்கள் நிந்தித்தனர். தேவனுடன் அவர்கள் பகிர்ந்து கொண்ட தூய ஐக்கியம், அவர்களைப் பாவம் மற்றும் நாடு முழுவதிலும் பரவிக்கிடந்த புறதெய்வ வணக்கம் ஆகியவற்றின் குப்பைக் குவியலில் இருந்து வந்த முடை நாற்றத்தை ஊதித்தள்ளும் சுத்தமான காற்றின் ஆவிக்குரிய சுவாசத்தைக் கொண்டவர்களாக்கிற்று.

எலியா ஒரு திஸ்பியனாக இருந்தார், ஒருவேளை அவர் கலிலேயாவில் இருந்த திஸ்பி என்னும் ஊரில் பிறந்திருக்கலாம்; ஆனால் அவர் கில்தான் என்ற இடத்தில் வசித்து வந்தார் (1 இராஜாக்கள் 17:1). அவர், தோல் அல்லது ஒட்டகத்தின்-முடியினால் ஆன அங்கியொன்றை உடுத்தி, அதைச் சூரியன்-முத்தமிட்ட தமது தோள்களில் இருந்து கீழே தளரவிட்டு தோல் கச்சையொன்றைத் தமது இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்தார் (1 இராஜாக்கள் 19:13; 2 இராஜாக்கள் 1:8). அவர் பலம் மற்றும் தைரியம் கொண்ட மனிதராக, கடுமையானவராக, உறுதியானவராக, சுயாதீனமானவராக, மற்றும் தனித்திருப்பவராக இருந்தார். அவரை ஒரு உள்ளூரிலேயே இருக்கச் செய்யும் பிணைப்பு எதையும் அவர் கொண்டிராதபடியால், அவர் மாபெரும் தூரங்களை விரைவாகக் கடந்து செல்வதையும், தி டீரென்று தோன்றி திடீரென்று மறைவதையும் நாம் காணுகின்றோம். அவரது தீர்க்கதரிசன ஊழியம், கி.மு. 918 முதல் 897 வரை இருபத்தோரு ஆண்டுகளுக்கு நடைபெற்றது.

எலியா வாழ்ந்திருந்த தனிவகையான காலமானது, ஒரு செய்தியாளர் மாத்திரமல்ல, ஆனால் அற்புதங்களும்[1] தேவைப்பட்ட காலமாயிருந்தது. எலியாவின் ஊழியத்தின்போது நடந்த இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள், மீட்பின் வரலாற்றில் உள்ள நான்கு அற்புதங்களின் காலகட்டங்களில்[2] இரண்டாவது காலகட்டத்தைச் சேர்ந்ததாகும். யெகோவாவின் மதத் திற்கும் பாகாலின் மதத்திற்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருந்த வாழ்வா-மரணமா என்ற போராட்டத்தினுல், அற்புதங்களின் இந்த வரிசை அவசியப்படுத்தப்பட்டது. வடக்கு ராஜ்யத்தில் இருந்த மக்களுக்கு, தேவன் அவர்களுக்கு அளித்திருந்த பிரமாணத்திற்கு உண்மையுள்ளவர்களாய் இருத்தல் என்பது பெரிய பிரச்சனையாக இருந்தது. ஜேம்ஸ் E. ஸ்மித் என்பவர், இஸ்ரவேல் வரலாற்றின் இந்த யுகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதினுர்:

> இந்த யுகத்திற்கு ஒரு செய்தியாளர் அவசியமானார்; அந்தச் செய்தி யாளர் நற்சான்றிதழ்கள் கொண்டிருக்க வேண்டும்; அற்புதங்களே அந்த நற்சான்றிதழ்களாக இருக்கக் கூடும். எலியா மற்றும் எலிசா என்பவர்களைக்கொண்டு நிகழ்த்தப்பட்டவை போன்ற வல்லமை யான அற்புதங்கள் மாத்திரமே, யேசபேல் மற்றும் அவளது எண்ணூற்று ஐம்பது ஆசாரியர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் செல்வாக்கிற்கு போதிய அளவிலான எதிர்ச்செயலாக இருந்திருக்க முடிந்தது. மாபெரும் தீர்க்கதரிசி மிகமோசமான காலத்திற்காக

முன்பதிவு செய்யப்பட்டிருந்தார்.[3]

எலியா தம்மையே இடர்ப்பாட்டிற்குள் வீசியெறிந்துகொண்ட தேவனுடைய மனிதராயிருந்தார். அவர் மாத்திரம் இல்லாதிருந்தால், இஸ்ரவேல் நாட்டில் தேவனுடைய நோக்கம் இழந்து போகப்பட்டிருக்கும்.

எலியா தேவனுடைய மாபெரும் மனிதர்களில் ஒருவராயிருந்ததால், நாம் ‘‘அவர் எவ்வகையான இருதயத்தைக் கொண்டிருந்தார்?’’ என்று கேட்க விரும்புகின்றோம். ஒரு மனிதருடைய இருதயத்தைக் கண்ணோக்காத வரை நாம் அம்மனிதரை உண்மையில் காண இயலாது. மாபெரும் மனிதர்கள், மாபெரும் ஆவிகளைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு. அவர்கள் வெளியிலிருந்து உள்ளாக அல்ல, ஆனால் உள்ளிருந்து வெளியிலாக ஏற்படுத்தப்பட்டுள்ளனர். மாபெரும் தன்மை என்பது எப்போதுமே, நமது தசைகள் பெருப்பதிலிருந்தல்ல, ஆனால் அர்ப்பணிப்புள்ள சிந்தனையில் இருந்தே வளருகிறது. உண்மையான பலம் என்பது உடல்பயிற்சியின் வீரச்செயல்களில் இருந்தல்ல, ஆனால் இருதயத்தின் உறுதித்தன்மையிலிருந்தே வருகிறது.

எலியாவைப் பற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ள எட்டு நிகழ்ச்சிகள் நமக்கு, அவரது ஆவிக்குரிய இருதயத்தின் எக்ஸ்-கதிர்ப் படத்தைக் காண்பிக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளைக் கண்ணோக்குவதன்மூலம், இந்த மனிதரைத் தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவமாக்கியது எது என்பது பற்றிய உட்கண்ணோக்கத்தை நாம் ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும்.

## இருதயத்தின் குணம்: ஒழுக்கத் தன்மை

எலியா தேவனுடன் ஒன்றித்து இருந்த தன்மை, அவரது ஆவிக்குரிய தன்மை என்பது, எலியாவின் இருதயத்தை மதிப்பிடத் தொடங்கும் இடமாக இருந்துள்ளது. அவர் உண்மையான ஒழுக்கத் தன்மை கொண்டிருந்தார், அது தேவனுடனான சரியான உறவில் இருந்து வெளிவரும் வகையானதாக உள்ளது. அவர் ‘‘யெகோவா என் தேவன்’’ என்று அர்த்தப்படுத்திய எலியா என்ற அவரது பெயருக்கு ஏற்றாற்போல் வாழ்ந்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் யெகோவாவுக்கு ஊழியக்காரராக இருந்தார்.

எலியாவைப் பற்றிய இந்த உண்மையானது, அவரது ஜெப வாழ்வில் இருந்தும் தேவனுடனான அவரது அன்றாட நடையில் இருந்தும் வெளி வருகிறது. அவர் தேவனை அறிந்திருந்தார், தேவனுடன் பேசினார், மற்றும் தேவனுடன் வாழ்ந்திருந்தார். சிலவேளைகளில் அவர் இயல்பான தோழமைகள் இன்றி விடப்பட்டிருந்தாலும், அவர் பரலோகத்தின் ஐக்கியம் இன்றி ஒருக்காலும் இருந்ததில்லை. அவர் தேவனைப் பற்றிப் பேசுபவராக மாத்திரம் அல்ல, ஆனால் தேவனுடன் பேசுபவராகவும் இருந்தார். அவர் தேவனைப் பற்றி நினைப்பவராக மாத்திரம் அல்ல, ஆனால் அவர் பரலோகத்தின் தேவன் என்ற நண்பர்களிலேயே மகாபெரியவருடன் இந்த உலகத்தினூடே எட்டி நடைபோட்டதில் தமது வழியை

*ஏற்படுத்தினார்.*

*ஆகாப், தமது மனைவியாகிய யேசபேலின் செல்வாக்கிற்குக் கீழ்ப்பட்டவராகி, தீரியரின் கடவுளாகிய பாகாலுக்கு ஆராதனை செய்யும் அகழியில் வீழ்ந்திருந்தார். இடர்பாடான இந்தக் காலகட்டத்தில், அவருக்கு முன்பாகத் தோன்றிய எலியா, அவர் யெகோவாவைப் புறக்கணித்ததற்குத் தண்டனையாக வரவிருந்த ஒரு பஞ்சத்தை முன்னுரைத்தார் (17:1). அந்தப் பஞ்சம் வந்ததால், எலியா முதலில் கேரீத் என்ற ஆற்றின் கரையோரத்தில் ஒளிந்து கொண்டார், அங்கே அவர் காகங்களினால் போஷிக்கப்பட்டார் (17:6). அந்த ஆற்றில் தண்ணீர் வற்றிப்போனபோது, தீருவின் வடக்குப் பகுதியில் மத்தியத்தரைக்கடலின் கரையில் இருந்த, சாறிபாத் என்ற ஊருக்குச் செல்லும்படி அவர் அறிவுறுத்தப்பட்டார் (17:9). அங்கு அவர் உயிருடன் இருப்பதற்குத் தேவையானவற்றை அளிக்கும் ஒரு விதவையிடம் செல்லுமாறு அவருக்குக் கூறப்பட்டது. பஞ்சமான சூழ்நிலையினிமித்தம், அந்த விதவை அவருக்குத் தண்ணீர் மற்றும் அப்பம் தரத் தயங்கியபோது, அவள் தேவனை விசுவாசிக்கும்படியும் அவர்மீது நம்பிக்கை வைக்கும் படியும் அவளை அவர் வேண்டிக்கொண்டார்.*

> *பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். "கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தில் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (17:13, 14).*

*எலியாவினால் வழிநடத்தப்பட்ட அந்த விதவை, தேவன்மீது நம்பிக்கை வைத்து, தனது தண்ணீரையும் கடைசி அப்பத்தையும் அவருடன் பகிர்ந்து கொண்டாள். பஞ்சம் முடியும் வரையில் அவளது மாவுப் பானையும் எண்ணெய்க் கலசமும் தீர்ந்து போகாதபடிக்குக் கர்த்தர் பார்த்துக்கொண்டார் (17:15, 16; லூக்கா 4:24-26). எலியாவின் ஊழியத்தில் நடந்த இந்த விசேஷ நிகழ்ச்சிகள் முழுவதிலும், ஒருவர் தேவனுடன் அந்தத் தீர்க்கதரிசி கொண்டிருந்த நெருக்கத்தினால் மனம் தாக்கப்படாதிருக்க இயலாது.*

*அந்த விதவையின் மகன் இறந்துபோனபோது, அவள் கடந்த காலத்தில் தான் செய்திருந்த பாவங்கள் சிலவற்றினிமித்தம் அந்த மரணம் சம்பவித்தது என்று முடிவு செய்தாள் (17:18). எலியா அந்தச் சிறுவனை மென்மையாகத் தூக்கி, மேல் வீட்டிற்குள் எடுத்துச்சென்று, செயல்முனைப்பான ஜெபத்தில் ஈடுபட்டார், அவனைத் தேவன் உயிரோடெழுப்ப வேண்டும் என்று நம்பிக்கையான விசுவாசத்துடன் ஜெபித்தார். எலியா அந்த மகனின் உயிருக்காக ஜெபிப்பதை வேதவசனங்களின் உருவகத்தினூடே காண்பதற்கு நம்மைத் தேவன் அனுமதிக்கின்றார். அது என்ன ஒரு நாடகத்துவமான காட்சியாக இருக்கிறது! தேவன் எலியாவின் ஜெபத்தைக் கேட்டு, அந்தப் பையனுக்கு உயிர் திரும்பி வரச்செய்தார்.*

> கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது; அவன் பிழைத்தான். அப்பொழுது எலியா பிள்ளையை எடுத்து, மேல்வீட்டிலிருந்து அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டுவந்து, அவனை அவன் தாயினிடத்தில் கொடுத்து: "பார் உன் பிள்ளை உயிரோடிருக்கிறான்" என்று சொன்னான். அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்" (17:22-24).

அற்புதமான இந்த நிகழ்ச்சியில் இருந்து, நம்மால் காணமுடிவது போன்றே அந்தப்பெண்ணும், எலியாவைக்குறித்துப் பின்வரும் இரண்டு உண்மைகளைக் காண முடிந்தது: எலியாவின் வாழ்வினுடைய அத்தாட்சியான பண்பும் எலியா பேசிய வார்த்தைகளின் தெய்வீக இயல்பும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, எலியா நமக்கு ஆவிக்குரிய தன்மைக்குப் பதிலி எதுவும் இல்லை என்று போதிக்கின்றார். ஒருவர் உபதேசரீதியாக, துப்பாக்கியின் குழல்போன்று நேராக இருக்க முடியும், ஆனால் அதே வேளையில் அவர் ஆவிக்குரிய வகையில் வெறுமையான துப்பாக்கிக் குழலாக இருக்கக் கூடும். ஒருவர் தேவனை அறியாத நிலையில் இருந்துகொண்டு, தேவனுடன் நடக்காது இருந்துகொண்டு மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க முயற்சி செய்வதைக் காட்டிலும் அதிக அவலமான நிலை எதையாவது உங்களால் கற்பனை செய்ய முடியுமா? ஆம், சில வேளைகளில் தேவன் பிரசங்கியாரின் நிலை எப்படியிருப்பினும், அவர் மூலம் பிறரைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்துகின்றார் என்பது உண்மையே, ஆனாலும் அது விதியாக அல்ல, ஆனால் விதிவிலக்காக உள்ளது. இரட்சிப்பின் திட்டத்தைப் போன்றே ஆவிக்குரிய தீர்மானத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டிய இன்னொரு விஷயம், நான் மற்றவர்களின் ஆவிக்குரிய தேவைகளை "பேணி வளர்க்க" முயற்சி செய்வதற்கு முன் முதலில் என்னைக் குறித்து "எச்சரிக்கையாய்" இருக்க வேண்டும் என்பதாகும் (1 தீமோத்தேயு 4:16).

பேட்செல் பேரட் பேக்ஸ்ட்டர் என்ற ஊழியக்காரர் ஒவ்வொரு நாள் காலையிலும் 5:00 மணிக்கு எழுந்து, படிக்கவும், அந்த நாளுக்கான தமது பணிகள் குறித்து ஜெபிக்கவும் செல்லுவதாக, அவரது துணைவியார் கூறினார். அவர் மூன்று வேலைகளைக் கொண்டிருந்தார்: அவர் டேவிட் லிப்ஸ்கோம்ப் பல்கலைக் கழகத்தின் வேதாகமத் துறைத் தலைவராகவும், ஹில்ஸ்பரோ கிறிஸ்துவின் சபையில் மேடைப் பிரசங்கியாராகவும், "Herald of Truth" ["சத்தியத்தை அறிவிப்பவர்"] என்ற தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளின் முதன்மைப் பேச்சாளராகவும் இருந்தார். சகோதர சகோதரிகள் அவரை, இருபதாம் நூற்றாண்டின் மிக நேர்த்தியான பிரசங்கியார்களில் ஒருவர் என்று கருதினார்கள். அவர் இவ்வளவு செயல்விளைவுள்ளவராகச் செய்திருந்தது எது? அது அவர் திறமை மட்டுமா? அவர் அதற்கு எல்லா உரிமையும் கொண்டிருந்தார். அவரால் ஒரு அஞ்சல் தலையைப் பற்றி, கேட்பவர்கள் கண்ணீர் விடும் அளவுக்கு உண்மைத் தன்மையுடனும் அவலச் சுவையுடனும் பேச முடிந்தது. அவர்

“மெசப்பொத்தமியா” என்பதை நீங்கள் “அல்லேலூயா!” என்று கூவ விரும்பும் வகையில் கூறமுடிந்தது. இருப்பினும், சகோதரர் பேக்ஸ்ட்டரை அறிந்துள்ளவர்கள், அவரது பலமானது அவரின் இயல்பான மற்றும் அடையப்பட்ட திறமைகளில் அல்ல, ஆனால் உண்மையிலேயே அவர் தேவனுடைய மனிதராயிருந்தார் என்பதிலேயே அமைந்திருந்தது என்பதை அறிந்திருந்தனர்.

மார்ஷல் கீபிள் என்ற ஊழியக்காரருடைய வாழ்வின் கடைசிப் பகுதியில், இந்த மாபெரும் சுவிசேஷப் பிரசங்கியாருடன் வில்லி கேட்டோ என்பவர் பயணம் செய்தார். சகோதரர் கீபிள் தமது வாழ்வுக் காலத்தின் போது, ஏறக்குறைய நாற்பதாயிரம் மக்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தக் கருவியாய் இருந்தார். அவர்களின் இரவுப் பயணங்களில் அவர்கள் ஒரு சாலையோர விடுதியில் தங்கியிருக்கும்போது, சகோதரர் கீபிள் எப்போதுமே, இரவில் ஓய்வெடுக்கப் படுக்கைக்குச் செல்லுமுன்பு படுக்கைகளின் அருகில் முழங்காற்படியிட்டு ஜெபிக்க வேண்டும் என்று வலியுறுத்துவார் என்பதாக சகோதரர் கேட்டோ கூறினார். மேலும் அவர் [கேட்டோ], சகோதரர் இரவு வேளையின்போது [படுக்கையில் இருந்து இறங்கி] பின்பு மீண்டும் படுக்கையில் ஏறிப்படுக்கும் முன்பு எப்போதுமே முழங்காற்படியிட்டு மீண்டும் ஜெபிப்பார் என்றும் கூறினர். “அவர் இரவில் எத்தனை முறை விழித்தாலும், படுக்கையின் அருகில் முழங்காற்படியிட்டு ஜெபிக்காமல் திரும்பவும் படுக்கைக்கு ஏறியதில்லை,” என்று சகோதரர் கேட்டோ கூறினார்.

தேவபக்தியுள்ள மனிதர்கள் வேறுபட்ட காலங்களிலும் வேறுபட்ட இடங்களிலும் ஜெபிக்கின்றனர், ஆனால் அவர்கள் யாவரும் பின்வரும் விஷயத்தைப் பொதுவில் கொண்டுள்ளனர்: அவர்கள் முறையாகவும் விசுவாச நிறைவுடனும் ஜெபிக்கின்றனர். அவர்கள் தங்கள் பெலத்தைத் தேவனுக்குள் காணுகின்றனர். சார்லஸ் ஹோட்ஜ் என்பவர் நமக்கு நினைவூட்டுகின்றபடி, “அவர்கள் ஜெபத்தில் நம்பிக்கை கொண்டிராமல், தேவன்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.” அவர்கள் தியானங்களில் நம்பிக்கை கொள்வதில்லை; அவர்கள் தேவனுக்கான அர்ப்பணித்தலில் நம்பிக்கை கொண்டுள்ளனர். தேவனுக்கு உடன்-வேலையாட்கள் என்ற வகையில், அவர்கள் தேவனுடன் நடந்து தேவனுடன் ஊழியம் செய்கின் றனர்.

## இருதயத்தின் குணம்: உறுதிப்பாடு

உறுதிப்பாடு என்பது எலியாவுக்குள் காணப்படுகிற இருதயத்தின் இன்னொரு குணமாக உள்ளது. அவர் தாம் விசுவாசித்தலைப் பற்றித் தொடர்ந்து திகைப்படைந்து கொண்டிருந்த மனிதக் கேள்விக்குறியாக இருக்கவில்லை. மாறாக, அவர் ஒரு ஆச்சரியக்குறியாக இருந்தார். அவர் தாம் விசுவாசித்த விஷயத்தால் அசைக்கப்பட்டார்; அவர் தாம் விசுவாசித்த விஷயத்தைக் குறித்து ஏதேனும் செய்வதற்குப் போதுமான அளவு தூண்டப் பட்டார். ஆகாப் அரசரிடத்தில் எலியா பேசியபோது, எலியாவின் தீர்மானமான உறுதிப்பாட்டைக் கண்ணோக்குங்கள்: “என் வாக்கின்படியே

அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (17:1).

ஆகாப் அரசராயிருந்தார் என்பதை நினைவில் வையுங்கள்; அவர் எலியாவின் வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின்மீது அதிகாரம் கொண்டிருந்தார்! நாம் இயேசுவைப் பற்றிப் பேசுவதற்காக நமது நண்பர்களிடத்தில் அனுப்பப்படும்போது, நாம் நடுங்கி அஞ்சுகின்றோம். அவர்கள் இல்லத்தில் இல்லாமல் இருக்க வேண்டும் என்று நாம் இரகசியமாக நம்பிக்கை கொள்கிறோம். ஒரு அரசரை, அதிலும் குறிப்பாக, யேசபேல் போன்ற பெண்ணை மனைவியாகக் கொண்டிருக்கும் ஒருவரைக் கடிந்து கொள்ளுதல் என்பது எதைப்போன்றதாக இருக்கும்? குறைவாகக் கூறுவதென்றாலும், தேவனுடைய சத்தியத்தினால் பலமாகப் பற்றிக் கொள்ளப்பட்டுள்ள இரும்பு போன்ற இருதயம் தேவைப்படும்.

எலியா தமது ஊழியத்தில் பிற்பாடு, யோசபாத்துடன் இணை அரசாயிருந்த யூதாவின் யோராம் என்பவருக்கு ஒரு பதிவேட்டை எழுதினார். அந்தப் பதிவேட்டில், அவர் யோசபாத்தின் வாழ்நாள் காலத்தின்போது அவர் [யோராம்] செய்திருந்த பாவங்களுக்கு மாத்திர மல்ல, ஆனால் யோசபாத்தின் மரணத்திற்குப் பின்பு அவர் [யோராம்] செய்திருந்த கொலைகளுக்காகவும் அவர்மீது வரவிருந்த தெய்வீக நியாயத்தீர்ப்பைக்கொண்டு அவரை எச்சரித்தார்.

> அப்பொழுது தீர்க்கதரிசியாகிய எலியா எழுதின ஒரு நிருபம் அவனிடத்திற்கு வந்தது; அதில்: "உம்முடைய தகப்பனான தாவீதின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், 'நீ உன் தகப்பனாகிய யோசபாத்தின் வழிகளிலும், யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வழிகளிலும் நடவாமல், இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபுடைய குடும்பத்தின் சோர மார்க்கத்திற்கு ஒத்தபடியே யூதாவையும் எருசலேமின் குடிகளையும் சோரம் போகப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் நல்லவர்களாயிருந்த உன் தகப்பன் வீட்டாரான உன் சகோதரரையும் கொன்றுபோட்ட படியினால், இதோ, கர்த்தர் உன் ஜனத்தையும், உன் பிள்ளை களையும், உன் மனைவிகளையும், உனக்கு உண்டான எல்லா வற்றையும் மகா வாதையாக வாதிப்பார். நீயோ உனக்கு உண்டாகும் குடல் நோயினால் உன் குடல்கள் நாளுக்குநாள் இற்று விழுமட்டும் கொடிய வியாதியினால் வாதிக்கப்படுவாய் என்று எழுதியிருந்தது' "
> *(2 நாளாகமம் 21:12-15).*

இப்படிப்பட்ட ஒரு கடிதம் எழுதத் தேவையான உறுதிப்பாட்டைப் பற்றி மீண்டும் ஒருமுறை நினைத்துப்பாருங்கள்.

ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு, பென் பெர்ரி என்பவர், அர்க்கன்சாஸின் சியார்ஸி என்ற இடத்தில் இருந்த சபைகளை, நகரத்தில் இருந்து ஆபாச இலக்கியங்களை வெளியேற்றும்படி வழிநடத்தினார். அந்தப் பணிப் பொறுப்பை நிறைவேற்ற பல மக்கள் அவருடன் இணைந்தனர், ஆனால் அது யாவும், நமது பலசரக்குக் கடைகளின் செய்தித் தாங்கிகளிலிருந்த

*அசுத்தமானவற்றைக் குறித்து ஏதாவது செய்ய வேண்டும் என்று துணிந்து நின்ற ஒரு மனிதரின் உறுதிப்பாட்டில் இருந்து தொடங்கியது. அவர் சபைக்குழுமங்களின் முன்பாக நின்று அதைப்பற்றி விவரித்து, அது மக்களின் மனங்களுக்குச் செய்து கொண்டிருந்தது என்ன என்பது பற்றிக் கூறி, அந்தக் குப்பையை நகரத்தில் இருந்து வெளியேற்ற நம்மால் என்ன செய்யக்கூடும் என்று வரைகுறிப்பிட்டார். எஞ்சியிருந்த நாங்கள், அதைப்பற்றிச் சிலவற்றைச் செய்யவேண்டும் என்ற அறைகூவலுடன் அவர் எங்களை எதிர்கொண்டபோது, அவருடன் கருத்து ஒருமித்துப்போனோம், ஆனால் நாங்கள் அவ்வாறு வழிநடத்திச் செல்லாதிருந்தது ஏன்? உங்களுக்குப் பதில் தெரியும்: உறுதிப்பாடு! பென் என்பவர் உறுதிப்பாட்டுடன் இருந்தார், நாங்கள் அவ்வாறு இருக்கவில்லை. அந்த விஷயத்தைக் கையாளுவதற்கு அவர் அக்கறை கொண்டிருந்ததற்காக நான் சந்தோஷம் அடைகின்றேன்.*

*இஸ்ரவேலின்மீதிருந்த பாகாலியத்தின் சவுக்கைக் கையாளுவதற்குத் தேவன், நேர்மையான எந்த இஸ்ரவேலராலும் பாகாலை ஆராதிப்பதை சகித்துக்கொண்டிருக்க இயலாது என்று நம்பும் ஒரு மனிதரைக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது. அவர் மற்றவர்கள் முன்பு, அரசரின் முன்பாகக்கூட நின்று, தேவனுடைய வல்லமையைத் தவிர வேறெதுவும் தன்னை ஆதரிக்காத நிலையில் இருக்கும் அளவுக்கு அவர் உறுதிப்பாடு உடையவராக இருக்க வேண்டியிருந்தது. அவர் பணத்தாலோ, மனிதத்திறமையினாலோ, அருட்கொடையினாலோ, அல்லது உலகக் கல்வியினாலோ மாற்றத்தைச் செயல்விளைவுக்கு உட்படுத்தக் கூடாதவராக இருக்க வேண்டியிருந்தது. தேவனுடைய செயல்விளக்கப்படுத்தப்படும் சத்தியத்தினால் மாத்திரமே புரட்சி வரவேண்டியிருந்தது. எலியாவின் மீது பொறுப்பின் இந்தப் போர்வையைத் தேவன் வைத்து, "போய் அவர்களுக்குக் காண்பி," என்று கூறியபோது, அதைச் செய்வதற்கு எலியா மன உறுதி கொண்டிருந்தார்.*

## இருதயத்தின் குணம்: தைரியம்

*எலியாவின் இருதயத்தின் இன்னுமொரு குணமாயிருந்தது தைரியம் ஆகும். உறுதிப்பாட்டின் வளர்ச்சி என்ற வகையில் தைரியம் தனது ஆழத்தையும் பலத்தையும் உறுதிப்பாட்டின் கிணற்று ஊற்றில் இருந்து பெற்றுக்கொள்கிறது. ஒரு விஷயத்தைப் பற்றி நீங்கள் உறுதிப்பாட்டுடன் இல்லையென்றால் அதைப் பற்றி நீங்கள் ஏன் தைரியம் கொண்டிருக்க வேண்டும்? தைரியம் என்பது உறுதிப்பாட்டில் இருந்து புறப்பட்டு வரவில்லையென்றால், அது ஊழியநோக்கம் எதுவுமற்ற, பண்பில்லாத, கண்மூடித்தனமான வைராக்கியமாய் இருக்கிறது. எலியா தைரியத்தையும் ஊழிய நோக்கத்தையும் கொண்டிருந்தார். அவரது தைரியம் என்பது, யெகோவாவை ஆராதிப்பதற்கு இஸ்ரவேல் மக்களைத் திருப்ப அவசியமானவற்றை யெகோவா தேவனே செய்வார் என்பதில் ஆழமாய்-வேரூன்றியிருந்த நம்பிக்கையைக் கீழ்க்கொண்டதாக இருந்தது.*

*$3^1/_2$ ஆண்டுகள் பஞ்சத்திற்குப்பின்பு (1 இராஜாக்கள் 18:1; லூக்கா 4:25; யாக்கோபு 5:17), எலியா ஆகாபிடம் செல்லும்படி தேவனால்*

*கட்டளையிடப்பட்டார். அதைத்தொடர்ந்து கர்மேல் மலையின்மீது நடந்த - போட்டி, தேவனுக்கும் பாகாலுக்கும் இடையிலான யுத்தம் - நிகழ்ச்சி வந்தது. பாகாலின் ஆசாரியர்கள் தங்களின் பித்தம்கொண்ட நடனங்கள் மற்றும் சடங்குகள் ஆகியவற்றின்மூலம் பாகாலின் தெய்வீகத்தன்மைக்கு ஆதாரத்தைப் பெறுவதற்காக நாள்முழுவதும் பிரயாசப்பட்டனர், ஆனால் அவர்கள் பரிதாபத்திற்குரிய வகையில் தோல்வியடைந்தனர். அவர்கள் மக்களின் விசுவாசத்தையல்ல, ஆனால் அவர்களின் அனுதாபத்தையும் புறக்கணித்தலையும் பெறுவதில் மாத்திரமே வெற்றியடைந்தனர்.*

*பின்பு எலியா மக்களை, தேவனுடைய பழமையான பலிபீடத்தைச் சுற்றி ஒன்றுகூட்டினார். அனேகமாக, இந்த பலிபீடம், பத்துகோத்திரங் களும் எருசலேமில் சென்று ஆராதிப்பதில் இருந்து அவர்களை தடுத் திருந்த குறையினிமித்தமாகப் பக்தியுள்ள இஸ்ரவேல் மக்களால் கட்டியெழுப்பப்பட்டதாக இருந்திருக்கும். யாரோ ஒருவர் அதை இடித்துப் போட்டிருந்தார். அதை எலியா பழுதுபார்த்து, ஒரு நோக்கத் திற்காகப் பன்னிரெண்டு கற்களை எடுத்து வைத்து, இவ்விதமாக இரண்டு ராஜ்யங்களாகப் பன்னிரெண்டு கோத்திரங்களும் பிரிந்திருந்தது தேவனுடைய தெய்வீக சித்தமாய் இருக்கவில்லை என்று அமைதியாகச் சாட்சியளித்தார் (18:31). மோசடியின் ஒவ்வொரு சாத்தியக்கூற்றையும் நீக்கிப்போடுவதற்காக அவர் மக்களிடத்தில், பலிப்பொருளையும் பலிபீடத்தையும் தண்ணீரால் நன்கு நனைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். இந்தத் தயாரிப்புகள் யாவற்றையும் செய்தபின்பு அவர், தேவனிடத்தில் உரத்து ஜெபம் செய்தார். அக்கினி விழுந்து, பலிப்பொருளைப் பட்சித்து, பலிபீடத்தையும் அழித்தது. யெகோவா தாம் இருப்பதை, தமது உண்மை நிலையை மற்றும் தமது வல்லமையை உறுதிசெய்தார். ஏமாற்றுக்காரர்கள் என்று நிரூபிக்கப்பட்ட பாகாலின் தீர்க்கதரிசிகள், மலையின் அடிவாரத்தில் இருந்த கீசோன் ஆற்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, எலியாவின் ஆணைப்படி கொன்று போடப்பட்டனர் (18:1-40; உபாகமம் 17:2-5).*

*மக்கள் யெகோவா தேவனை ஒப்புக்கொண்டு யெகோவாவின் தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படிந்தனர், மற்றும் மழை மேகங்கள் கூடிவந்ததில் தேவனுடைய பதில்செயல் காணப்பட்டது. அந்த வட்டாரத்தின் ஆட்சியாளராய் இருந்த அரசரைக் கனப்படுத்துவதற்காக, எலியா தமது உடைகளை வரிந்து கட்டிக் கொண்டு, யெஸ்ரயேலின் ஒலிமுக வாசலுக்கு, ஆகாபின் இரதத்திற்கு முன்னால் மாபெரும் பலத்துடன் ஓடினார் (18:41-46).*

*எலியாவின் தைரியத்தை நீங்கள் பாராட்ட விரும்புவதில்லையா? அவர் பலிபீடத்தைப் பழுதுபார்ப்பதற்கு அமைதியாகச் சென்றதை, பலிப்பொருளை ஆயத்தப்படுத்தியதை, அக்கினி வந்து விழும்படிக்கு ஜெபித்ததைக் கற்பனை செய்து பாருங்கள். அது தைரியம் என்பதாக உள்ளது. அது சரியான வகையிலான தைரியமாக - அர்ப்பணிக்கப்பட்ட, ஆவிக்குரிய தைரியமாக - உள்ளது. எலியா, கருத்துணர்வற்ற தைரியத்தால் அல்ல, ஆனால் ஜீவனுள்ள தேவன்மீதுள்ள விசுவாசத்தினால் பிறந்த தைரியத்தைச் செயல் விளக்கப்படுத்தினார். அந்த வேளையில்*

*அளிக்கப்பட்ட சாட்சியத்தையும் அந்தத் தீர்க்கதரிசியின் தைரியத்தையும் அந்த மலையின்மீது நின்று எதிர்த்திருக்க யாரால் முடிந்திருக்கும்? அவ்வாறு செய்பவர்கள் தங்கள் இருதயங்களைக் கற்பாறை போலாக்கிக் கொண்டவர்களாய்த் தான் இருந்திருப்பார்கள்!*

*யேசபேல் தனது தீர்க்கதரிசிகளின் அழிவினால் மூர்க்கம் அடைந்து, எலியாவைக் கொன்றுபோடுவதாகச் சபதம் செய்தாள், அப்போது எலியா ஓரேப் மலைக்குத் தப்பியோடியிருந்தார். அங்கு அவர் மோசேயைப் போலவே, நாற்பது பகல்களும் நாற்பது இரவுகளும் தேவனால் பேணப் பட்டார் (யாத்திராகமம் 24:18; 34:28; உபாகமம் 9:9, 18; 1 இராஜாக்கள் 19:8). இந்தக் காலகட்டத்தில் நாம் எலியாவை அவரது மிகமோசமான நிலையில் காணுகின்றோம். அவர் ஒரு சூரைச் செடியின் கீழ் அமர்ந்து, தமது உயிரை எடுத்துக் கொள்ளும்படிக்குத் தேவனிடத்தில் கேட்டுக் கொண்டார். தைரியமின்மை மற்றும் ஏமாற்றம் ஆகியவற்றினால் மூழ்கடிக்கப்பட்ட அவர் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் தாம் செய்திருந்ததாகவும், ஆனாலும் தாம் தோல்வியடைந்து விட்டதாகவும் நம்பினார். அவர் "தமது கயிற்றின் முனையில் இருந்தார்." அவரது மனச்சோர்விற்காகத் தேவன் அவரை மென்மையாகக் கடிந்துகொண்டு (19:9), அவரது ஊழியத்தின் எஞ்சியபகுதி எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு முன்கண்ணோட்டத்தை அவருக்குக் கொடுத்தார் (19:13), மற்றும் அவரது கடமைக்கு அவரைத் திருப்பி அனுப்பினார். எலியாவிடம் தேவன், சீரியாவின் அரசராக ஆசகேலையும், இஸ்ரவேலின் அரசராக யெகூவையும், விக்கிரகாராதனையின் துன்மார்க்கத்தை நாட்டில் இருந்து விலக்கிப் போடுவதற்குத் தமக்கு ஊழியக் கூட்டாளியாக எலிசாவையும் அபிஷேகம் செய்யும்படி கூறினர் (19:15-18).*

*எலியா புறப்பட்டுச் சென்று உடனே எலிசாவைக் கண்டுபிடித்தார். எலிசாவின்மீது சால்வையைப் போர்த்திய எலியா, அவரை [எலிசாவை] ஊழியம் செய்வதற்கும் தேவன் தம்மிடத்தில் கொடுத்திருந்த மற்ற கட்டளைகள் நிறைவேற்றும்படி அவற்றை அவரிடத்தில் ஒப்புவிப்பதற்கும் அழைத்தார் (19:19-21). எலியாவின் பணிப்பொறுப்பை மேற்கொண்டு செய்வதற்குத் தைரியம் தேவைப்பட்டது.*

*எலியா, ஆகாப் அரசரை நாபோத்தின் திராட்சத் தோட்டத்தின் அருகே சந்தித்து, யேசபேல் நாபோத்தையும் அவரது மகன்களையும் சட்டப்பூர்வமாகக் கொலைசெய்ததினிமித்தம் யெகோவாவின் பழிவாங்குதல் வரவிருந்தது பற்றி அறிவிக்கத் தைரியம் கொண்டிருந்தார் (21:20-24). பலவீனமான இருதயம் கொண்டவர்களை இப்படிப்பட்ட பணிப்பொறுப்பிற்குப் பயன்படுத்தியிருக்க முடியாது. பலத்த இருதயம் கொண்ட, ஆவிக்குரிய வகையில் இரும்பு மனிதரான எலியா அடியெடுத்து வைத்து, ஆகாபை அவரது கண்களில் உற்றுநோக்கி, தேவனுடைய நியாயத்தீர்ப்புத் தண்டனையை - அனேகமாகத் தமது குரலில் நடுக்கம் எதுவுமின்றி - அறிவித்தார்.*

*நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய*

> இரத்தத்தையும் நாய்கள் நக்கும் … நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப்போட்டு, … இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்கரித்து, … யேசபேலையும் குறித்துக் கர்த்தர்: "நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்" … என்றார் (21:19-23).

எலியா உரைத்த அறிவிப்பு ஒரு எச்சரிக்கையாக மாத்திரம் இருக்கவில்லை; அது உண்மையான விஷயமாயிருந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு, கீலேயாத்தில் இருந்த ராமோத்தில் நடந்த யுத்தத்தில், ஆகாப் கொல்லப்பட்ட விஷயமானது, ராஜ குடும்பத்தாருக்கு எதிராக எலியா உரைத்திருந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைத் தொடங்கி வைத்திருந்தது (22:1-38).

ஆம், எலியா வழக்கத்திற்கு மாறான தைரியம் உடையவராய் இருந்தார். இந்த எடுத்துரைப்புகளை வாசிக்கும் எவரும், அவரது இருதயத்தின் பண்பார்வத்தைக் காணத் தவறிவிட இயலாது. சூரைச் செடியின் கீழ் அமர்ந்திருந்த வேளையில் எலியா கொண்டிருந்த ஊக்கக் குறைவு என்ற ஒரு விஷயம் தவிர, அவர் பலத்தில் உயர்ந்த மனிதராக, பயமின்றி மனவலிமையுடன், பாகாலியத்திற்கு எதிரான யுத்தம் செய்தார்.

யாரேனும் ஒருவர் பிரசங்கிக்க எழுந்து நிற்பதற்கு முன்பு, சகோதரர்கள் யாராவது, "அன்பார்ந்த தேவனே, எங்கள் சகோதரர் உம்முடைய சுவிசேஷத்தைப் பயமோ அல்லது ஒருதலைப்பட்சமோ இன்றி, கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் நின்று பிரசங்கிப்பாராக" என்று சிலவேளைகளில் ஜெபிக்கின்றனர். "பயமோ அல்லது ஒருதலைப்பட்சமோ இன்றி" என்ற அந்த வார்த்தைகளை முதன்முதலாகப் பயன்படுத்தியது யார் என்று நான் வியப்படைகின்றேன். அது யாராக இருந்தாலும், அவர் சரியான கருத்தையே கொண்டுள்ளார். உண்மையான சுவிசேஷப் பிரசங்கியார், ஏதாவது ஒரு குழுவிற்குத் தேவையானதை மாத்திரம் அளிக்க இயலாது; அவர் எல்லாருக்கும் தைரியமாகப் பிரசங்கிக்க வேண்டும், அவர் எல்லாருக்கும், "கர்த்தர் இவ்வாறு கூறுகின்றார்" என்பதை அளிக்க வேண்டும். தைரியம் இல்லாத பிரசங்கியார், முதுகெலும்பு இல்லாத மனிதரைப்போல் இருக்கின்றார்!

## முடிவுரை

இப்போது நாம் தேவன் பண்புள்ள, உறுதிப்பாடுள்ள, மற்றும் தைரியமான மனிதர்களைப் பயன்படுத்துகின்றார் என்பதைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். E. M. பவுன்ட்ஸ் என்பவர், மேன்மையான செயல்முறைகளைத் தேவன் கண்ணோக்குவதில்லை; அவர் மேன்மையான மனிதர்கள்மீது கண்ணோக்கமாயிருக்கின்றார் என்று எழுதினார். ஆவிக்குரிய நிலப்பரப்பை மாற்றும்படி தேவன் விரும்பியபோது, அவர் தூதர்களின் சேனையொன்றைக் கொண்டுவரவில்லை, ஆனால் அவர் ஒரு மனிதருக்குக் கட்டளை ஒன்றைக் கொடுத்தார். அவர் சாதாரண

மான மனிதராயிருக்கவில்லை; அவர் எலியாவாக - பாகாலுக்கு முன்பாக மக்கள்கூட்டம் விழுந்து பணிந்துகொண்டிருந்தபோது, தேவனுடன் நடந்த உறுதியான ஆவிக்குரிய போர்வீரராயிருந்தார். அவர் அதிகாரம், வேதனை அல்லது வெகுஜன அபிப்பிராயம் ஆகியவற்றினால் அச்சுறுத்தப்படாத வராக, ஆனால் மற்றவர்களின் இருதயங்கள் பயத்தினால் தோல்வியடைந்த வேளையில், தேவனுடைய வீரமிக்க மனிதராக இருந்தார். செய்யப்பட வேண்டியதாயிருந்த ஒவ்வொன்றையும் எலியா நிறைவேற்றியிருக்க வில்லை, ஆனால் நாட்டின் திசையை மாற்றுவதற்கு அவரைத் தேவன் பயன்படுத்தினார். அவர் சற்றுக்காலத்திற்கு, தேவனுடைய ஒற்றைஆள் இராணுவமாக இருந்தார். பழங்கால இஸ்ரவேலுக்கு ஆவிக்குரிய வகையில் ஒரு புதிய நாளைக் கொண்டுவருவதற்குத் தேவன் எலியாவைப் பயன்படுத்தினார் என்று பழைய ஏற்பாட்டுக் கல்வியாளர்கள் ஒப்புகொள் கின்றனர்.

எலியா எவ்வகையான குணம் கொண்ட மனிதராயிருந்தார் என்பதை [காணத்] தவறிவிடாதீர்கள். மோசே மற்றும் யோவான் ஸ்நானன் என்ற தீர்க்கதரிசிக்கு மத்தியில், இவருக்குச் சமமான எந்தத் தீர்க்கதரிசியும் இருந்திருந்தல் என்பது மிகக்கடினமாகும். அவர் - இதற்கு முன்பு ஏனோக்குக்கு மாத்திரமே அருளப்பட்டிருந்த (ஆதியாகமம் 5:24) - இறந்துபோகாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் என்ற கனத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் தமது உதவியாளரான எலிசா வுடன், யோர்தான் நதியின் கிழக்குப்பகுதிக்குப் பயணம் சென்றபோது, அக்கினிக் குதிரைகள் பூட்டப்பட்ட இரதம் அவருக்குத் தோன்றியது. தேவன் எலியாவைச் சுழல்காற்றில் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டு, அந்தத் தீர்க்கதரிசிகளின் ஆவிகள் மீண்டும் பரதீசில் ஒன்றுகூடியிருக்கும் வரைக்கும் அவர்களைப் பிரித்து வைத்தார் (2 இராஜாக்கள் 2:1-12).

பழைய ஏற்பாட்டின் கடைசி இரு வசனங்கள், கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருவதற்கு முன்பு தேவன், எலியாவை அனுப்புவார் என்று முன்னுரைத்தன (மல்கியா 4:5, 6). இந்தத் தீர்க்கதரிசனமானது, திஸ்பியனைப்போன்று தாழ்மையான உடையிலும் தோற்றத்திலும் (மத்தேயு 3:4; மாற்கு 1:6), தேவனுக்குப் பற்றுறுதியிலும் மற்றும் ஊழியத்திலும் (மத்தேயு 11:11-14; 17:10-13; மாற்கு 9:11-13; லூக்கா 1:17) இருந்த யோவான் ஸ்நானனில் நிறைவேறியதென்று புதிய ஏற்பாடு விளக்கம் தருகிறது.

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு முன்பாக, நமது கர்த்தர் மறுரூபமானபோது, அவர் மகிமையின் நிலையில், மோசேயுடனும் எலியாவுடனும் நடந்து, பேசிக்கொண்டிருப்பவராகக் காணப்பட்டார் (மத்தேயு 17:3, 4). இந்த விசேஷித்த நிகழ்ச்சியில், மூவர் கொண்ட இந்தச் சிறு குழுவில், எலியா தோன்றியதென்பது, நிச்சயமாகவே அந்தத் தீர்க்கதரிசியின் வாழ்வினுடைய மாபெரும்தன்மை பற்றிச் சிலவிஷயங்களைக் கூறுவதாக உள்ளது. தேவன் எந்த ஒரு நல்ல காரணமும் இன்றி, ஊழியம் மற்றும் கனப்படுத்துதலுக்குத் தனி மனிதர் ஒருவரை ஒருக்காலும் பிரித்தெடுத்து வைப்பதில்லை.

*மாபெரும் தன்மை மற்றும் உண்மையிலேயே பயன்படும் தன்மை என்பவற்றிற்குக் குறுக்குவழி எதுவும் இருப்பதில்லை. எலியா, தேவனுடன் தமது நெருங்கிய நடையினிமித்தமாக, தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவமாக, "இஸ்ரவேலுக்கு இரதமும், சாரதியுமானவராக," (2 இராஜாக்கள் 2:12ஐக் காணவும்) இருந்தார். நாம் இந்த உலகத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்கு எலியா நம்மைத் தூண்டியிருப்பார் என்றால், நாம் அந்த வித்தியாசத்தை, சந்தைவெளிக்குச் சென்று மாற்றத்திற் காக உரக்கக் கூவுவதன்மூலம் செய்பவர்களாய் இருக்க மாட்டோம். நாம் யுத்தம் முடிவதற்கு முன்பு அதைச் செய்ய வேண்டியிருக்கலாம், ஆனால் நம்முடைய இருதயத்தினுடைய உள்ளான குகைக்குள் சென்று தியானித்து நம்மைப் புதுப்பித்துக் கொள்ளுதல் என்பதே நாம் செய்யவேண்டிய முதல் செயலாக உள்ளது, ஏனெனில் தேவன், சரியான வகையான இருதயம் கொண்டுள்ள நபர் மூலமாகவே, தாம் செய்யவேண்டியவற்றை நிறைவேற்ற முடியும்.*

***கற்க வேண்டிய பாடம்:***
***தேவன், இந்த உலகத்தில் சரியான வகையிலான மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு, அவர் சரியான வகையிலான மாற்றத்தின் முகவரைக் கொண்டிருக்க வேண்டும்.***

---

*குறிப்புகள்*

*[1]எலியாவின் வாழ்வுடன் பதினோரு அற்புதங்கள் இணைவுபட்டுள்ளன: (1) மழையைத் தடுத்தல் (1 இராஜாக்கள் 17:1); (2) காகங்களினால் உணவளிக்கப் படுதல் (1 இராஜாக்கள் 17:6); (3) மாவு மற்றும் எண்ணெயைப் பெருக்கப் படுத்துதல் (1 இராஜாக்கள் 17:14); (4) சீதோனியப் பெண்ணின் மகனை மரணத்தில் இருந்து உயிருடன் எழுப்புதல் (1 இராஜாக்கள் 17:22); (5) கர்மேல் மலையில் பலிப்பொருளைப் பட்சிக்க வானத்தில் இருந்து அக்கினி இறங்குதல் (1 இராஜாக்கள் 18:38); (6) மழை பெய்யும்படி வானம் திறக்கப்படுதல் (1 இராஜாக்கள் 18:45); (7) எலியாவுக்கு ஒரு தூதனால், அப்பமும் தண்ணீரும் தரப்படுதல் (1 இராஜாக்கள் 19:5); (8) ஐம்பது மனிதர்களைப் பட்சிக்க வானத்தில் இருந்து இறங்கிய அக்கினி (2 இராஜாக்கள் 1:10); (9) வேறு ஐம்பது மனிதர்களைப் பட்சிக்க வானத்தில் இருந்து இறங்கிய இன்னொரு அக்கினி (2 இராஜாக்கள் 1:12); (10) யோர்தான் நதியில் தண்ணீரைப் பிரித்தல் (2 இராஜாக்கள் 2:8); (11) எலியா சுழற்காற்றில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் (2 இராஜாக்கள் 2:11). [2]அந்த நான்கு காலகட்டங்கள் பின்வருமாறு (1) எபிரெயர்கள், எகிப்திய அடிமைத்தளையில் இருந்து [எகிப்தியருக்குத் தரப்பட்ட] வாதைகளின் தொடரின் மூலமாக வெளியேறுதல், (2) எலியா மற்றும் எலிசா ஆகியோரின் காலம், (3) நமது கர்த்தரின் வாழ்வு, மற்றும் (4) நடபடிகள் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி சபையின் தொடக்கம்.* [3]James E. Smith, *I & II Kings*, Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1975), 356.